பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத வருடம் கார்த்திகை மீ 02 உ ஞாயிற்றுக்கிழமை (18 - 11 1990) ஹிஜ்ரி 1410 ற ஆகிர் 8 கதிர் 256

★ யாழ்., கிளிநொச்சி, முல்லை., மன்னார் மாவட்டங்களில்

# சகலருக்கும் ஒரு மாதத்துக்கு உலர் உணவு நிவாரணம்!

## பணப் புழக்கமும் சீராகும் சாத்தியம்

யாழ்ப்பாணம், நவம்பர் 18

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்திவு, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் வாழும் சகல மக்களுக்கும் வருமான வேறுபாடு பொருட்படுத்தப்படாமல், ஒரு மாத காலத்துக்கு இலவசமாக உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

கொழும்பு சென்று திரும்பிய அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இத்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் கொழும்பில், ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவைச் சந்தித்து யாழ்ப்பாண மக்களின் நிலைமையைத் தெரியப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து வருமான வேறுபாடு பாராமல், சகலரும் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கணித்து, எல்லோருக்கும் நான்கு வாரங்களுக்கு இலவச உலர் உணவு வழங்க ஏற்பாடாகி உள்ளதாக அரச அதிபர் சொன்னார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் —

இடம் பெயர்ந்தோருக்கான நான்காம் கட்ட நிவாரணம் இம் மாதம் 26 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அதற்குப் பின்னர் புதிய இலவச உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்படும் என அறியவந்தது.

1987 ஆம் ஆண்டில் இந்திய இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் குடாநாட்டில் உள்ள சகலருக்கும் இலவச உலர் உணவு வழங்கப்பட்டது. அது போலவே இந்த இலவச விநியோகமும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நவீன மருத்துவ உபகரணங்கள் வந்து சேரும்

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ். மாவட்ட வைத்திய சாலைகளுக்கு அமெரிக்க அரசினால் வழங்கப்பட்ட நவீன மருத்துவ உபகரணங்கள் கிடைக்கவுள்ளன.

கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள இந்த மருத்துவ உபகரணங்கள் கொழும்பில் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவை விரைவில் யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-5)

## அமெ. தூதருடன் பேச்சு

யாழ்ப்பாணம், நவ 18

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் அமெரிக்கத் தூதுவரையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

யாழ். மாவட்ட நிலைமைகள் பற்றியும், இங்கு மக்கள் படும் துன்பங்கள் பற்றியும் அமெரிக்கத் தூதருக்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டதாக அறியவருகிறது. (ஓ 6)

## மக்கள் வங்கிக்கு பணம் இல்லை

பருத்தித்துறைக்கு வந்துள்ள குமண கப்பலில் எதிர்பார்க்கப்பட்டது போல மக்கள் வங்கிக்குப் பணம் எதுவும் வரவில்லை.

இலங்கை வங்கிக்கே 2 கோடி 50 லட்சம் ரூபா பணம் வந்துள்ளது.

இலங்கை வங்கியில் கணக்கு வைத்துள்ள அரச திணைக்கள, கூட்டுத்தாபனங்கள் சிலவற்றுக்கு நேற்றே பருத்தித்துறையில் வைத்து வங்கி அதிகாரிகளால் குறிப்பிட்டளவு பணம் கையளிக்கப்பட்டது. (ஓ-6)

## மினி பஸ்ஸுக்கு பெண் பலி

புளியங்கூடல், நவ. 18

மினிபஸ்ஸில் மோதுண்ட பெண் ஒருவர் மரணமானார்.

கடந்த வெள்ளிக்கிழமை புளியங்கூடல் சந்தியில் இச் சம்பவம் நடந்தது.

சரவணை சின்னமடுவைச் சேர்ந்த வைரவன் சின்னப்பிள்ளை (வயது 56) என்பவரே இறந்தவர் ஆவார். (இ 125)

## செய்திச் சாரம்

## ஆஸ்பத்திரிவீதி வங்கியில் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ. 18

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ் இலங்கை வங்கிக் கிளையில் நாளை திங்கட்கிழமை முதல் செப்டம்பர் மாதத்திற்குரிய ஒய்வூதியம் வழங்கப்படும்.

முதலில் வரும் 200 பேருக்கு ஒய்வூதியம் பணமாக வழங்கப்படும் என்று வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்தார். (ஓ-6)

## அமைச்சரவை விஸ்தரிப்பு ஒத்திவைப்பு

புதுடில்லி, நவ. 18

இந்திய அமைச்சரவை விஸ்தரிப்பை திங்கட்கிழமை வரை பிரதமர் சந்திரசேகர் ஒத்திவைத்துள்ளார் என்று நேற்று மாலை அறிவிக்கப்பட்டது.

அமைச்சரவை விஸ்தரிப்பு நேற்று இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது [ஓ-எ]

## ஈமக்கிரியை கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ 18

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்துக்குப் பின்னர் இராணுவ நடவடிக்கைகளின் போது மரணமானோரின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட இருந்த ஈமக்கிரியைச் செலவுக் கொடுப்பனவு 2 ஆயிரம் ரூபா - பணமாக கிடைக்கும்.

இந்தக் கொடுப்பனவுக்கான பணம் யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது (ஓ-6)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 18

நேற்று நண்பகல் வயாவிளான் பகுதியில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ரோம் (தர்மராஜா சங்கானை) வீரமரணமடைந்தார். [உ]

## ஜனசக்தி திட்டம் வடக்கில் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 18

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் ''ஜனசக்தி'' திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தம்மிடம் கொழும்பில் வைத்து நேரில் தெரிவிக்கப்பட்டதாக அரச அதிபர் நேற்றுக் கூறினார்.

வடக்கு - கிழக்கில் இடம் பெற்றுவரும் இராணுவ நடவடிக்கை காரணமாகவே அங்கு 'ஜனசக்தி' திட்டம் இப்போதைக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டதாம்.

இந்தத் திட்டம் ஏனைய ஏழு மாகாணங்களிலும் நடைமுறையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ 6)

## தனியார் தரை மார்க்கமாக உரம் கொண்டு வரலாம்

யாழ் - குடாநாட்டுக்கு யூரியா தவிர்ந்த ஏனைய உர வகைகளைத் தரைமார்க்கமாகக் கொண்டுவர அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

தனியார் வியாபாரிகள் கொழும்பில் உள்ள உரக் கூட்டுத்தாபனத்திடம் அனுமதி பெற்றுக் கொண்டுவர முடியும்.

இதே சமயம்—

''யு எஸ். எயிட்'' நிறுவனம் யாழ் - குடாநாட்டுக்குத் தேவையான உர வகைகள், விதைதானியங்கள் என்பனவற்றை கப்பல் மூலம் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அறியவருகிறது. (ஓ-6)

## அஜந்தா நினைவுத் தூபி

யாழ்ப்பாணம், நவ 18

கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த பெண் போராளிகளில் ஒருவரான கல்வியங்காடு அஜந்தாவின் நினைவாக கலவியங்காடு கலைமகள் வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத் தூபி இன்று ஞாயிறு மாலை நான்கு மணிக்கு திறந்துவைக்கப்படும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி கலைமகள் வீதி, இப் போராளியின் ஞாபகார்த்தமாக அஜந்தா வீதி என பெயர் மாற்றம் செய்யப்படவும் உள்ளது. (ஓ-15)

## 21 பேர் பலி

புதுடில்லி, நவ 18

பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் சீக்கியத் தீவிரவாதிகள் நேற்று நடத்திய திடீர்த் தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர். (ஓ-எ)

## முல்லைத்தீவு மருத்துவமனைகளில் மருந்து வகைகள் ஏதும் இல்லை!

யாழ்ப்பாணம், நவ. 18

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் மருந்து வகைகள் எதுவும் கையிருப்பில் இல்லை. இதனால் அங்கு சுகாதார சேவைகள் ஸ்தம்பிக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருத்துவமனைகளுக்கு இம் மாதத்தின் பின்னர் மருந்து வகைகள் எவையும் அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் தேவையான அளவில் மருந்து வகைகள் இருக்கின்றபோதிலும் அவற்றை முல்லைத்தீவுக்கு எடுத்து வருவதில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கான தடுப்பு ஊசிகள் உட்பட எந்தொரு வகையான 'தடுப்பு மருந்து'களும் இல்லை என்றும் கூறப்பட்டது.

இதனால் 'கிளினிக்'குகளும் அங்கு இயங்குவதில்லை.

கர்ப்பிணிகளுக்கான வைத்திய பரிசோதனைகள் மட்டும் நடைபெறுகின்றன. ஆனால் அவர்களுக்கு வழங்க மருந்து வகைகள் எவையும் அங்கு இல்லை. [உ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஜேர்மன் செப்பேட் அல்சேசன் ஆண் குட்டிகள், பூச்சி அகற்றப்பட்ட நிலையில் உள்ளது வயது ஏழு கிழமை. தொடர்பு:- சேவியர்; 219, டலாலி வீதி. யாழ்ப்பாணம். (14791)

அல்சேசன் (பெண்) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு பூச்சி நீக்கியது. தொடர்பு: பொ. தில்லைராசா 3 ஆம் சட்டை டருத்தித்துறை வீதி கல்வியன் காடு (Organ Classes) எதிர் வீடு (14778)

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14550)

## வழமையான சேவை

மூன்று மொழிகளிலும் றபர் ஸீல், பிளாஸ்டிக் போட், விளம்பர போட் யாவும் செய்து கொள்ள ''வீமா'' 104, ஆஸ்பத்திரி சந்தி, யாழ்ப்பாணம் தினசரி காலை 9 மணி முதல் பி. ப. 1 00 மணிவரை சேவை செய்கின்றது. [14754]

## நியூ விக்ரேஸ்

மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணத்திலுள்ள மேற்படி ஸ்தாபனம் மீண்டும் வழமையாக இயங்கிக்கொண்டு இருப்பதனால், திருத்துவதற்கு கொடுக்கப்பட்ட உங்களின் பொருள்களை காலை 8 30 தொடக்கம் பி பகல் 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம் (சி/5430)

## லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமதுவாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [சி/5402]

## மூக்கு பொடி

மிகத்தரமான காரம், மணம், குணம் நிறைந்த மூக்குபொடி சாதாரண வாசனையூட்டிய வகைகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:- V K தேவகுருநாதன் 142, ஆடியபாத றோட், கல்வியங்காடு சந்தையில் இருந்து 75 யார் தூரத்தில் உள்ளது. யாழ்ப்பாணம். (14792)

## மணமகள் தேவை

பிரித்தானிய அரசாங்கத்தில் 14 வருடங்களாக உயர் பதவி வகிப்பவரும் பிரித்தானிய பிரஜையும், உயரிய குணமிக்க விரைவில் இலங்கை வரவிருப்பவருமான 39வயது 5'4'' உயரமுடைய கண்ணியமான சந்தோலிக்க [R.C] சகோதரனுக்கு படித்த பண்புள்ள நற்குணமுள்ள ஆங்கிலம் பேசத்தக்க மணமகளைத் தேடுகின்றார், விரும்புவோர் முழுப்படத்துடன் சகலவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும் C/o 154, உதயன், யாழ்ப்பாணம் (14721)

## மொழி பெயர்ப்பாளர் எழுத்தாளர் தேவை

ஆங்கில தமிழ் மொழி பெயர்ப்பாளர்களும் எழுத்துத்துறை அனுபவமுள்ளவரும் உடன் தேவை அனுபவம் தகைமை வயது குறித்து விரைமாக எழுதவும் விவரம் இலக்கம் 155,மே/பா உதயன், யாழ்ப்பாணம். (14793)

## FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

## தவறிவிட்டது

15-11-90இல் கொழும்பில் இருந்து வந்த 30 சிறி 3820 இலக்கமுடைய 'அஜந்தா' மினிபஸ்ஸில் இருந்து கறுப்பு நிற Bag கொடிகாமத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் A. யோசவ் 21, மவுண்ட் கார்மல் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து தங்களின் Bag ஐப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன். (14789)

# யாழ்ப்பாணக் கல்லூரி

## புதிய மாணவர் அனுமதி 1991

பின்வரும் வகுப்புக்களில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**முதலாம் வருடம்:**

1 - 2 - 85க்கும், 31 - 1 - 86க்கும் இடைப்பட்ட காலத்திற் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

**ஆறாம் வருடம்:**

1 - 2 - 80க்கும், 31 - 1 - 81க்கும் இடைப்பட்ட காலத்திற் பிறந்த பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்.

**பதினொராம் வருடம்,**

(விஞ்ஞானம், கணிதம் வர்த்தகம்)
க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிறந்த தகைமைகள் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஆற்றல் மிகுந்த மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு: 20 - 12 - 90

விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்திற் பெறலாம்

விண்ணப்பக் கட்டணம் ரூபா 50/-

— அதிபர்.

(சி-5434)

## தென்னங்கன்று

நல்லஇன தென்னங்கன்றுகள் அச்சுவேலி தென்னை நாற்று பண்ணையில் நியாய விலையில் விற்கப்படுகின்றன. (இ-11)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
காசிப்பிள்ளை
நல்லதம்பி

மண்ணுலகில்:
14 - 1 - 1915

விண்ணுலகில்:
29 - 11 - 1989

திதி:-
18 — 11 — 1990
ஞாயிற்றுக்கிழமை

இறந்த 1 வருட பூர்த்தி
29 - 11 - 1990

எங்கள் அன்புத் தந்தையே!

நீர் பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் உம் நினைவு என்றும் எங்களை விட்டு அகலாது;

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கொல்லங்கலட்டி,
பெரியாவிடை,
தெல்லிப்பழை.
[சி-5440]

# 31ம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



முருகப்பர்
சங்கரப்பிள்ளை

தோற்றம்:-
05 - 04 - 1920

மறைவு:-
21 - 10 - 1990

கீழ்கரவையம்பதி வாசரும் இலுப்பையடியை உறைவிடமாகக் கொண்ட திரு. முருகப்பர். சங்கரப்பிள்ளை அவர்களின் 31ம் நாள் அந்தியேட்டிக்கிரியை 20 - 11 - 90 செவ்வாய்க்கிழமை காலை 9 00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தெடுத்தனை,
சரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(14780)

# DIPLOMA IN NURSING

## தாதிப் பயிற்சியில் டிப்ளோமா

புதிய பிரிவு வகுப்புகள் ஆரம்பம்.
19. Nov. 1990

- ★ வெளிநாடு செல்வோருக்காக துரித பயிற்சி நெறி
- ★ இலவச ஆங்கில வகுப்புகள்
- ★ சிறந்த பாமஸி பயிற்சியுடன் கூடியது விவரங்கட்கு.

**North Ceylon Technical Institute**

14. சென்பீற்றர்ஸ் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5429)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:-
4 - 3 - 1929

தாயகமண்ணில்:
29 - 11 - 1989

திதி:-
18 — 11 — 1990

அமரர் வைத்திலிங்கம் பாலசுந்தரம்
[ஓய்வுபெற்ற தபால் அதிபர் யாழ்ப்பாணம்]

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே! எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்த அருமை அப்பாவே, நீங்கள் மறைந்தும் இன்னும் எங்கள் கண்முன்னே நடமாடும் தெய்வமாகக் காட்சி தருகின்றீர்கள், உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!
உங்கள் பிரிவால் வாடும்!

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமகன். பேரப்பிள்ளை.

''சரோஜி இல்லம்''
நந்தாவில் அம்மன் வீதி
கொக்குவில் கிழக்கு.
(14703)

# நன்றி நவிலல்



அமரர்
தம்பையா ஐயாத்துரை
(இடைக்காடு)

எம் குடும்பத் தலைவர் அமரர் தம்பையா ஐயாத்துரையின் இறுதிக் கிரியைகளிலும். அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியங்களிலும் கலந்து கொண்டும் உதவியும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும், சிறப்பித்த உறவினர். நண்பர்கள், யாவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்வண்ணம் — செங்கமலம் ஐயாத்துரை, செல்வராஜா ஐயாத்துரை (Metlects. Colombo), சிவராஜா ஐயாத்துரை (Food Control, Jaffna Kachcheri), தேவராஜா ஐயாத்துரை (Railways Maradana), செல்வராணி ராஜேந்திரன். கமலராணி அருமைத்துரை, நவரத்தினராஜா ஐயாத்துரை (யாழ். பல்கலைக்கழகம்), ஜெயரத்தினராஜா ஐயாத்துரை, குணரத்தினராஜா ஐயாத்துரை (வீரகேசரி கொழும்பு) ஜமுனாராணி சக்திதாசன், நித்தியானந்தராஜ ஐயாத்துரை.

'' செங்கமலம் ''
இடைக்காடு, அச்சுவேலி. (14797)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சந்திரசேகர் எவ்வழி?

இந்தியப் பிரதமர் கதிரையிலிருந்து வி பி சிங் இறங்கிவிட்டார்; சந்திரசேகர் புதிதாக அமர்ந்திருக்கிறார். இந்திய நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை கொண்டு வரப்பட்ட நம்பிக்கை கோரும் பிரேரணையில் வெற்றியீட்டி, தம்மை ஒருவாறு நிலைப்படுத்திக் காட்டி உள்ளார்.

எனினும் அவரின் அரசு எத்தனை மாதங்களுக்கு நிலையாக நிற்கும் என்பது ராஜீவ் காந்தியின் விருப்பத்தைப் பொறுத்தது.

தாமே ஆட்சி அமைக்கக் கூடிய சாத்தியம் இருந்தபோதிலும், ராஜீவ் அதனைச் செய்யவில்லை. மண்டல் கமிஷன் அறிக்கை அமுல், ராமஜன்ம பூமி விவகாரம் ஆகியவற்றால் முறையே சாதிச் சண்டையும், சமயச் சண்டையும் இந்தியாவில் புதிதாக பூகம்பங்களை உருவாக்கி இருக்கின்றன. இவ்வேளையில், அவற்றைத் தலையில் தூக்கிப்போட்டு தனது செல்வாக்கைக் குறைக்க அவர் விரும்பவில்லை. உடனடியாகத் தேர்தல் வந்தாலும் தனிக்கட்சியாக அரசு அமைக்கக் கூடிய பலம் கிடைக்குமா என்ற சந்தேகம். அதனால் பிரச்சினைகளைச் சந்திரசேகரின் தலையில் கட்டி அடித்து, அவரைச் செல்வாக்கு இழக்கச்செய்வது, தனக்கு வாய்ப்பான நேரத்தில் அவருக்கு நல்கும் ஆதரவை நிறுத்தி, தேர்தலில் அதிகப் பெரும்பான்மையுடன் வென்று நிலையான அரசு அமைப்பது இதுவே ராஜீவின் விருப்பம்; தந்திரம்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இந்திய அரசும், அரசியலும் தேர்தலை நோக்கித்தான் ஓடப்போகின்றன. அதன் நிமித்தம், புதிய பிரதமர் சந்திரசேகர் ஈழத் தமிழர் விவகாரத்தில் என்ன நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பார் என்ற கேள்வி தமிழர்கள் மத்தியில் எழுவது இயல்பு.

வடக்கு-கிழக்கில், ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கிய பின்னர் நடந்த நிகழ்வுகளுக்கு, வெறும் கவலை தெரிவிக்கும் அறிக்கைகளையும், கருத்துக்களையும் வெளியிட்டதைத் தவிர வி. பி. சிங் அரசு உருப்படியாக எதையும் செய்யவில்லை. மெதுவாக நழுவிக்கொள்ளும் தந்திரப் போக்கை அது கடைப்பிடித்தது. உள்நாட்டில் பிரச்சினைகள் மூக்களவிற்கு முட்டியிருப்பதால், சந்திரசேகரும், சிங் வழியே செல்வார் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

சந்திரசேகர் அரசு ஒரு பொம்மை. அதன் பின்னுக்கு நின்று நூலை இழுத்து நடனம் ஆட்டுவிப்பவராக ராஜீவே இருப்பார். தான் கைதொட்ட விடயத்தில் அவருக்கு அக்கறை இல்லாமற் போகாது என்ற மாற்றுக் கருத்தும் உண்டு.

ஆனால் அவர் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவாரா, அல்லது பழைய கோலத்தில் இருப்பாரா என்பது குறித்து திட்டவட்டமாக எதுவும் தெரியாது. ஈழத்தமிழர் விவகாரத்தில் ராஜீவ் பழையவராக இருப்பாரா அல்லது புதியவராக விளங்குவாரா என்பது தமிழகத்தில் இருந்து கிடைக்கும் உந்துதலின் தன்மையையும், வேகத்தையும், கனத்தையும் பொறுத்ததே.

# கடமைக்குச் செல்லாத ஆசிரியரின் சம்பளத்தை இடைநிறுத்த முயற்சி

## மாகாணக் கல்வி அமைச்சு விவரம் திரட்டுகிறது

யாழ்ப்பாணம், நவ. 18

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில் இதுவரை தொடர்ந்து கடமைக்குச் செல்லாத ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படலாம்.

அண்மைக்கால சம்பவங்களைத் தொடர்ந்து கடமைக்கு செல்லாமல் இருக்கும் ஆசிரியர்களின் விவரம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலை அதிபர்கள் மூலம் திரட்டப்படும் விவரங்களை அடுத்து தொடர்ந்து கடமைக்கு செல்லாத ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படலாம் என அறியப்படுகின்றது.

பல ஆசிரியர்கள் அகதிகளாக இடம் பெயர்ந்து இந்தியாவுக்கும் மற்றும் வெளிமாவட்டங்களுக்கும் சென்றிருப்பதால் அவர்களை கடமைக்கு திரும்பிச் செல்ல தூண்டும் விதமாக சம்பளம் இடைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. [இ - 11]

## ஆசிரியர்கள் வருகிறார்கள் ஆனால் மாணவர்கள் குறைவு

### ஹாட்லி நிலைமை குறித்து கவலை

பாடசாலைக்கு ஆசிரியர்கள் ஒழுங்காக வருகிறார்கள்; ஆனால் மாணவர்களின் வரவு குறைவு.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலேயே இந்த நிலைமை இருந்து வருகிறது.

இது குறித்து பிரஸ்தாப கல்லூரி அதிபரும் பழைய மாணவர் சங்கத்தினரும் கவலை தெரிவித்துள்ளனர்.

மாணவரின் வரவு தொடர்ந்து இந்த நிலையில் இருந்தால் கல்லூரியின் கல்வித் தரத்தைத் தொடர்ந்து பேண முடியாது போகலாம் என்று இவர்கள் கவலை தெரிவித்தனர். (இ)

## கலை நிகழ்ச்சிக்கு அனுமதி தேவை

யாழ்ப்பாணம், நவ. 18

மாவீரர் நினைவுதினத்தை முன்னிட்டு தென்மராட்சி பச்சிலைப்பள்ளிப் பகுதியில் தயாரிக்கப்படும் சகல கலை நிகழ்ச்சிகளும் நாளை 19ஆம் திகதிக்கு முன் தென்மராட்சி கலை கலாசார அவை காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட்டு முன்கூட்டியே அனுமதி பெறப்படவேண்டும்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் கலை கலாசாரப் பிரிவினர் கேட்டுள்ளனர். (இ)

## ஆங்கில ஆசிரியர் சேவைக் கால பயிற்சி

யாழ்ப்பாணம், நவ. 18

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரியின் பகுதிகளில் சேவையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். [இ]

## "பாஸ்" பெற வேண்டும்

யாழ்ப்பாணம், நவ. 18

கொழும்புக்குச் செல்வோர் மட்டுமன்றி வவுனியா - பூந்தோட்டம் பகுதிக்கு அப்பால் செல்லும் சகலரும் பிரதேச அலுவலகங்களில் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்டாரங்கள் இத் தகவலை தெரிவித்தன.

லொறிகளும் இவ்வாறு பிரதேசப் பொறுப்பாளர்களிடம் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## திருமலை அகதிகளுக்கு நாகர் கோவிலில் குடிசைகள்

### வியாழக்கிழமை அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து வந்த குடும்பங்களுக்கு நாகர் கோவில் மேற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக குடிசைகள் சம்பிரதாயமுறைப்படி கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

செஞ்சிலுவைச் சங்கத்தால் அமைக்கப்பட்டுவரும், ஆயிரம் குடிசைகளில் முதலில் வேலைகள் முடிவடைந்த 100 குடிசைகளே தற்போது வழங்கப்பட்டுள்ளன.

இந்த வைபவத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். குழுத்தலைவர் செல்வி அன்ரநட், யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தை சேர்ந்த திரு சொர்ணராஜா, திரு வி. எஸ். கணேசலிங்கம் பிரெஞ்சு டாக்டர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-3)

## ரயில் சேவை

கொழும்பு, நவ. 18

கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையே நேரடி ரயில் சேவை ஒன்றை நடத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

## இந்தியப் பிரசைகளுக்கும் தேசிய அடையாள அட்டை

கொழும்பு, நவ. 18

நாட்டில் தங்கியுள்ள 94 ஆயிரம் இந்திய பிரசைகளுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்க அரசு முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை உடன்பாட்டின் கீழ் இந்தியப் பிரசைகள் என்று கணிக்கப்பட்ட 94 ஆயிரம் பேரும் தேசிய அடையாள அட்டை எடுக்கத் தகுதி பெற்றுள்ளார்களா!

—இப்படி செய்தியாளர்கள் கேட்டதற்கு, 'ஆம்' என்று ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிராட்மன் வீரக்கோன் பதிலளித்தார்.

தேசிய அடையாள அட்டை இல்லாத காரணத்தால் மலையகத்தில் உள்ள இந்தியப் பிரசைகள் பொலீசாரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர் என்று ஏற்கனவே முறையிடப்பட்டிருந்தது.

இலங்கைப் பிரசைகள் அல்லாதோருக்கும் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பு ஆகியவற்றை அரசியல் சாசனத்தின்கீழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. வீரக்கோன் சொன்னார். (இ-எ)

## கைதடியில் மகப்பேற்று விடுதி

சாவகச்சேரி, நவ. 18

கைதடி ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதித் திறப்புவிழா புதன்கிழமை மாலை நடைபெற்றது.

பிரதம விருந்தினரான டாக்டர் திரு த. இராமசாமி விடுதியை திறந்துவைத்தார்.

சித்த மருத்துவத்துறை தலைவர் டாக்டர் திரு. எஸ். பவானி தலைமையில் விழா நடைபெற்றது.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் உதவிமருத்துவஅதிகாரி திரு. பரமசிவம்பிள்ளையின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமானது.

உபவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சிவபாதம், டாக்டர் நச்சினார்க்கினியர், உ. அ. அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் ஆசி உரைவழங்கினர்.

சமூகத்தில் மகப்பேற்று விடுதியின் பங்குஎன்னும் பொருள் பற்றி டாக்டர் சி. சிவஞானசுந்தரம் உரையாற்றினார்.

சிறப்புவிருந்தினர் டாக்டர் பே பிலிப் சிறப்புரை வழங்கினார்.

[illegible] நன்றி உரை கூறினார். (இ-31)

## மயிலிட்டி றோ. க. த. க. பாடசாலை

ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை விண்ணப் பப்படிவங்களை நிரப்புவதற்காக, நாளை திங்கட்கிழமை, நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களிலும் காலை 10.00 மணிக்கு பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலகத்தில் சமுகம் அளிக்குமாறு மயிலிட்டி றோ. க. த. க. பாடசாலை மாணவர்கள் கோரப்படுகின்றனர்.

## ஹெலிக்கு அஞ்சி ஓட சைக்கிள் களவு

கொடிகாமம், நவ 18

ஹெலியின் தாக்குதலுக்கு அஞ்சி ஓடியவர் தனது சைக்கிளை இழந்தார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை கொடிகாமம் சந்தைக்கு சமீபமாக இடம் பெற்றது, (இ-75)

## தங்கம்மா ஞாபகார்த்த வைத்தியசாலை

தங்கம்மா ஞாபகார்த்த அரசினர் வைத்தியசாலை மீண்டும் வழமைபோல் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த ஐந்து மாதங்களாக இந்த வைத்தியசாலைமூடப்பட்டிருந்தது தெரிந்ததே.

வைத்தியசாலை விமான, ஷெல் தாக்குதல்களால் சேதம் அடைந்ததுடன் கட்டில்-மெத்தைகள் கதிரை-வாங்குகள், அலுமாரிகள் குளிர் சாதனப் பெட்டி என்பன திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ - 51)

## கிழக்கு அரச ஊழியருக்கு இங்கு வேலை வழங்குக!

### அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 18

'கிழக்கிலங்கையில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள சகல அரச ஊழியர்களையும், யாழ்ப்பாணத்தில் உள்ள ஏதேனும் அரச திணைக்களத்தில் வேலை செய்ய அனுமதிக்க வேண்டும்'.

கிழக்கிலங்கைஇடம்பெயர்ந்தோர் ஊழியர் சங்கம் மேற்கண்ட கோரிக்கையை உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கு விடுத்துள்ளது.

யாழ் அரச அதிபர் மூலமாக இந்தச் சங்கம் அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ யாழ்ப்பாணத்தில்உள்ள அரச திணைக்களங்களில் இடம் ஒதுக்கப்படாதவர்களுக்கு முழுச் சம்பளத்துடன் விசேட விடுமுறை வழங்க வேண்டும்.

★ அரசாங்கத்தால் விசேடமாக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும்.

★ அரசாங்கத்தால் விசேடமாக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும் என்று யாழ். அரச அதிபருக்கு பணிப்புரை வழங்கவேண்டும்.

★ வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் போக்குவரத்துச் சேவை, தொலைத் தொடர்புச் சேவையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும்.

★ நிலைமை வழமைக்குத் திரும்பும்வரை சிங்கள ஊழியர்களுக்கு வழங்கியது போன்ற சலுகைகள் தமிழருக்கும் வழங்கப்பட வேண்டும். (இ-3)

## கிளிநொச்சியில் கட்டடங்களை திருத்த பொருள்கள் இல்லை

கிளிநொச்சி, நவ. 18

கிளிநொச்சியில் இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்த வர்த்தக நிலையங்கள், வீடுகள், கட்டடங்களை மீண்டும் திருத்தி அமைப்பதற்கு கட்டடப் பொருள்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் மருத்துவ ஆய்வுகூடம்
# எயிட் லைன்ஸ்

நோய் கண்டறிய உதவும் ஆய்வுகூடம் 193, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம் (சாமி & கோ கட்டடத்தில்) 19 - 11 - 90 முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. தற்போதைக்கு மின் உபயோகிக்கப்படாத சோதனைகள் மட்டுமே செய்யக்கூடியதாக இருக்கும். (14784)


## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்

**பசுபதிக்குருக்கள் சின்னம்மா**



மண்ணுலகு:- 12 - 4 - 1902

விண்ணுலகு:- 29 - 11 - 1989

திதி: 18 — 11 — 1990

குடும்பத்தின் ஒளி விளக்காய், வழிகாட்டியாய், தருமநெறி காப்பவளாய் திகழ்ந்து பூவுலகை விட்டு விண்ணுலகு அடைந்த ஓராண்டு சென்றாலும் அவர் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

**மகன்மார், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (14299)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரி புஷ்பவதி ஆனந்தர்

திருமதி மேரி புஷ்பவதி ஆனந்தர் காலமானார். இவர் Dr. ஆனந்தவதி [U K], ஆனந்தராஜா [U,K], அரியராஜா [Canada] ஆகியோரின் அன்புத் தாயாரும், லின்கன், சாந்தி, சாந்தினியின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை 19 ஆம் திகதி திங்கள் காலை 9 00 மணியளவில் ஆராதனையின் பின் மெதடிஸ்ட் பகுதியில் நல்லடக்கத்திற்காக 88, ஸ்ரேசன் வீதியில் இருந்து எடுத்துச் செல்லப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

திருமதி பேரின்பநாயகம்

88, புகையிரதவீதி,
யாழ்ப்பாணம். [14654]

## திருமதி சிவசாந்தி தேவராஜு

சங்கரப்பிள்ளை றோட், மானிப்பாயைச் சேர்ந்த திருமதி சிவசாந்தி தேவராஜு 17 ஆம் திகதி அன்று காலமானார். அன்னார் ந தேவராஜு [இலங்கை வங்கி] வின் அன்பு மனைவியும், இந்திராவதி [இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்] யின் அன்பு மகளும், ருசாந்தன் [கண்ணன்], பிரமிளா [இச்சி], சசிகலா, கயல்விழி ஆகியோரின் தாயாரும், தே. மனோகரன் [ஜேர்மனி] இன் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [18 11-90] மு.ப 10 மணியளவில் அவரதுஇல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் எற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:

த. தேவராஜு

சங்கரப்பிள்ளை றோட்,
மானிப்பாய். [14800]

## அம்பரகேது ஜெயக்குமார்

வேலணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பரகேது - இந்திரகுமாரி தம்பதியின் செல்வப் புதல்வன் செல்வன் ஜெயக்குமார் 13-11-1990 இல் கொழும்பில் அகால மரணமானார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

திரு. திருமதி பாலச்சந்திரன்

சண்டிலிப்பாய் வடக்கு. (14799)

## அ'தோட்டையில் மட்டும் 633 பேர் பலி!

கொழும்பு, நவ. 18

தென்பகுதியில் இடம்பெற்ற ஜே. வி பி. வன்செயல்களின்போது அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மட்டும் 575 பொதுமக்களும் 58 பொலீஸாருமாக 633 பேர் கொல்லப்பட்டனர்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்று வரும் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று உரையாற்றும்போது பிரதி பொலீஸ் மா அதிபர் வீரரத்தினா இத்தகவலைத் தெரிவித்தார். (ஒ-எ)

## ரயில்வே ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ 18

யாழ் மாவட்ட ரயில்வேப் பகுதி ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவு காசாக வழங்கப்பட இருக்கிறது.

இவர்களுக்கான ஜுலை, ஆகஸ்ட் மாத வவுச்சர்கள் வந்து சேர்ந்துள்ளன. (ஒ-6)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 18

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் (வடமராட்சி கிழக்கு) ஆகிய பகுதிகளுக்கு - நடமாடும் சுகாதார சேவைக்கென-செஞ்சிலுவைச் சங்கம் தெரிவு செய்யவிருக்கும் வைத்திய அதிகாரிகள், சுகாதார போதனாசிரியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான நேர்முகப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை நடைபெற உள்ளது. [ஒ-6]

## காஷ்மீரில் வன்செயல்கள்

ஸ்ரீநகர், நவ. 18

காஷ்மீரின் பல பகுதிகளில் நேற்று பரவலாக வன்செயல்கள் இடம்பெற்றன.

ஸ்ரீநகருக்கு வெளியேயுள்ள வானொலி நிலையம் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

அரச வங்கி கட்டடம் ஒன்றும் தீவிரவாதிகளினால் சேதமாக்கப்பட்டது.

நேற்றைய வன்செயல் சம்பவங்களில் 9 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. [ஒ-6]

## ஆசிரியருக்கு கடமை லீவு

அச்சுவேலி, நவ. 18

யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்விடிப்ளோமா [பகுதிநேரம்] பயிற்சிபெறும் ஆசிரியர்கள் விரிவுரைகளில் கலந்து கொள்வதற்கு சனிக்கிழமைகளில் கடமை லீவு வழங்கப்படும்.

சனிக்கிழமை பாடசாலை நாளாக கணிக்கப்பட்டு வகுப்புகள் நடைபெறுவதாலேயே இந்த வசதி அளிக்கப்பட்டுள்ளது. (இ-11)

### சகலருக்கும்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

**பணம்**

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் மந்தமடைந்திருக்கும் பணப் புழக்கமும் சீராகும் அறிகுறிகள் தென்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு மாதாந்தம் ஐந்து கோடி ரூபாவை பணமாக அனுப்பி வைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அரச அதிபர் சொன்னார்.

இதுவரை திணைக்களங்கள், வங்கிகளுக்கென்று மாதாந்தம் ஐம்பது லட்சம் ரூபா [illegible] [அ-6]

### ஈழப் போராளிகள் விடயம்:

## முதல்வர் கருணாநிதிக்கு சந்திரசேகர் எச்சரிக்கை!

புதுடில்லி, நவ. 18

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு ஊக்கமளித்து, நாட்டின் ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவித்தால், அதனைப் பார்த்துக் கொண்டு மத்திய அரசு சும்மா இருக்காது.

பிரதமர் திரு சந்திரசேகர் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் முன் கண்டவாறு எச்சரித்தார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு விவாதத்தின் முடிவில் பதிலளித்துப் பேசுகையில் பிரதமர், அஸாம் மற்றும் தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைகிறது என்ற குற்றச்சாட்டுக்கள் பற்றியும் பிரஸ்தாபித்தார்.

ஈழத் தமிழ்ப்போராளிகளின் நடமாட்டத்தினால் தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்ற முறைப்பாடுகள் தொடர்பாக மாநில முதலமைச்சர் கருணாநிதியுடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் பிரதமர் சந்திரசேகர் சொன்னார்.

இதே வேளை—

தமிழகத்தில் ஈழத் தமிழ்ப் போராளிகளை மாநில அரசு பகிரங்கமாக ஊக்குவித்து வருவதாகவும்–

அப்போராளிகள் மாநில மக்களிடத்தில் கட்டாய வசூலில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டும் மனு ஒன்றை அ. தி. மு. க. எம். பி. சீனிவாசன் பிரதமர் சந்திரசேகரிடம் சமர்ப்பித்தார்.

பிரதமரின் நாடாளுமன்ற உரை தமிழகத்தில் சட்டம் - ஒழுங்குஅமைதியைத்தோற்றுவிக்க உதவும் என்றும் திரு. சீனிவாசன் தெரிவித்தார். (ஒ-எ)

## அவர்களுக்குக் கொடுப்பது இவர்களுக்கும் வேண்டும்

### யாழ். செஞ்சிலுவைத் தலைவர்

யாழ்ப்பாணம், நவ. 18

குவைத், ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து பாதிக்கப்பட்டு வந்தவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு, செஞ்சிலுவைச் சங்கம் என்பன கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வழங்க இருக்கும் அதே உதவிகளை, வடபகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கவேண்டும்.

இவ்வாறு யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தலைவர் டாக்டர் அ. தெய்வேந்திரம் கொழும்பிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தைக் கேட்டிருக்கிறார்.

குவைத், ஈராக் ஆகிய நாடுகளிலிருந்து வந்து, யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் தமது பெயர்களைப் பதிவு செய்தவர்களின் விவரங்களைத் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்க இருப்பதாக அவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ 6)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபாபதி நாகராசா

நல்லூர், முருகேசர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் பொறியியலாளர் [நீர்ப்பாசன இலாகா] திரு. க. நாகராசா அவர்கள் 8 - 11 - 1990 இல் லண்டனில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி(P. W. D- ஓவசியர்) நாகம்மா தம்பதிகளின் அருமை மகனும், நகுலாவின் அன்புக் கணவரும், சந்திரன் கலா, ரூபி ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம்சென்ற காறாளசிங்கம் [P W. D ஓவசியர்], திருமதி செல்வரத்தினம் ஜெயசிங்கம், காலம் சென்ற கனகபூசனம் கதிர்மலப்பிள்ளை, தனபாலசிங்கம் (முன்னாள் நில அளவையாளர்; உரிமையாளர் நல்லூர் வீடியோ சென்ரர்) ஆனந்தராசா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

அ த. ஜெயசிங்கம்

இல: 8. சுவாமியார் வீதி ஒழுங்கை,
கொழும்புத்துறை. [14790]

## திருமதி குருசாமி கமலாதேவி

கச்சேரியடியைச் சேர்ந்த திருமதி குருசாமி கமலாதேவி சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குருசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கருணாகரன், ஜெயாசரன் [நோர்வே], திருமதி சுகுணாதேவி [கனடா], திருமதி நிர்மலாதேவி [கனடா]. பிரபாகரன் [கனடா], செல்வி மேகலாதேவி, மஞ்சுளாதேவி [நோர்வே] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு நடராஜா [ஹோலண்ட்], திரு. சௌந்தரராஜா [கனடா], ஜெயா [நோர்வே], அரியமலர் [ஆசிரியை, புதுக்குடியிருப்பு றோ. க. பாடசாலை] ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வி அநுஷா, அநுஷாந்தன், ஸாலினி, பிளாயின், பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, குணபூபதி, இராசமணி, நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்!

மேகலாதேவி

'கருணை அகம்'
113. கண்டி றோட்,
கச்சேரியடி (14653)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292[illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 11 - 1990 இல் அ[illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org